**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதியாரின் புனைப்பெயர் ஒன்றினைக் குறிப்பிடுக.
2. மதுரைப் புலவர் கந்தசாமி நடத்திய பத்திரிக்கையின் பெயர் என்ன?
3. பாரதியார் தெய்வம் என்று எவற்றைக் குறிப்பிடுகின்றார்?
4. பாரதியார் குயில் பாட்டினை எந்த இடத்தில் இயற்றினார்?
5. செம்மை மாந்தரின் குணங்களைக் குறிப்பிடுக.
6. அரசியல் விடுதலைப் பெறுவதற்கான சிறந்த வழி எது?
7. பாரதியார் காட்டும் புது மூலக்கூறுகள் எவை?
8. சமுதாயச் சிந்தனை உடைய பாடல்களைப் பாரதிக்கு முன்பே பாடியவர்கள் யார்?
9. பாரதி வெளியிட்ட முதல் நூல் எது?
10. பாரதிதாசனின் பெற்றோர் யாவர்?
11. மதவாதிகள் என பாரதிதாசன் யாரைக் குறிப்பிடுகின்றார்?
12. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் இடம் பெறும் முதன்மைக் கதைமாந்தர்கள் யாவர்?
13. நாடக வகைகள் யாவை?
14. விச்சுளி ஆட்டம் என்பது யாது?
15. பாரதிதாசன் குறிப்பிடும் மூவகை வாழ்க்கை யாவை?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியார் மூடநம்பிக்கையை எவ்வாறு சாடுகிறார்?
2. பாரத மக்களின் ஒற்றுமையை பாரதியார் எவ்வாறு வலியுறுத்துகிறார்?
3. எல்லோரும் ஓர் நிறை – குறிப்பு வரைக.
4. பெண்கல்வி குறித்து பாரதி குறிப்பிடுவனவற்றை எழுதுக.
5. உலகளாவிய நோக்கு என்றால் என்ன?
6. சஞ்சீவி மூலிகையின் அற்புதங்களைக் குறிப்பிடுக.
7. பாரதிதாசன் குறிப்பிடும் புரட்சித் திருமணம் குறித்து எழுதுக.
8. விருந்தோம்பல் குறித்து பாரதிதாசன் கூறியுள்ள செய்திகளைப் புலப்படுத்துக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் பத்திரிகைப் பணி குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) கலைமகள், திருமகள் குறித்து பாரதி கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

2. (அ) பாரதியாரின் குயில் பாட்டு குறித்து கட்டுரை வடிவில் விடை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் குடும்ப விளக்கின் ஒருநாள் நிகழ்வுகளை விரித்துரைக்க.

3. (அ) மகளிர் வாழ்வியல் குறித்து பாரதிதாசன் கூறும் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியின் சிறப்புகளாகப் பாரதிதாசன் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

***